உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 20.07.2026 • மலர் 04 • இதழ்: 201 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 20.07.2026 • Vol : 04 • Issue : 201 • Page : 4 • Rs. 5/-

# அயோத்தி கோவில் நன்கொடை விவகாரம்

## பிரதமர் மோடிக்கு ராகுல் காந்தி கடிதம்



உத்தரபிரதேசம், ஜூலை 20

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலுக்கு உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் நன்கொடைகளை வாரி வழங்கி வருகின்றனர். கோவில் வளாகத்தில் இருக்கும் உண்டியலில் அதிக அளவில் பக்தர்கள் காணிக்கை செலுத்துகின்றனர். இந்த உண்டியல் பணம் கையாடல் செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த புகார் குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட சிறப்பு விசாரணை குழு அமைக்கப் பட்டது. அந்த குழு நடத்திய விசாரணையில் முறைகேடு நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து சிறப்பு விசாரணை குழு தனது விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தது. அதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் பிரதமர் மோடிக்கு நேற்று கூட்டாக கடிதம் எழுதி உள்ளனர். அதில் கூறியிருப்பதாவது: சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் நாடாளுமன்றத்தில் ராமர் அறக்கட்டளையை அறிவித்தவர் பிரதமர் மோடி. ஆனால்அதன் உறுப்பினர்கள் அவரது அரசாங்கத்தால் மட்டுமே நியமிக்கப்பட்டனர். அறக்கட்டளையின் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத்மற்றும்அதன்துணை அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் என்பது பொதுவான விஷயம். அறக்கட்டளையின் முன்னாள் பொது செயலாளரும் பிரதமரின் நெருங்கிய கூட்டாளிதான்.

இத்தகைய குற்றச்செயல் நடந்திருக்கும் நிலையில், நீங்கள் இப்போது மவுனம் காப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பொறுப்புக் கூறலையும் நிதியை மீட்டெடுப்பதையும் உறுதி செய்வது உங்கள் கடமை. பணம், தங்கம், வெள்ளி உள்ளிட்ட அனைத்து காணிக்கைகளையும் கையாண்டவிதம் உள்பட அறக்கட்டளையின் நிதி விவகாரங்கள் குறித்து உடனடியாக சுதந்திரமான மற்றும் விரிவான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். பக்தர்கள் வழங்கிய காணிக்கைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை ஒவ்வொரு பக்தரும் அறிந்து கொள்ளும் வகையில், விசாரணையின் முடிவுகளையும் அறக்கட்டளையின் கணக்கு விவரங்களையும் பொதுவெளியில்வெளியிட வேண்டும்.

பதவி அல்லது செல்வாக்கு எதுவாக இருந்தாலும்,இதற்குபொறுப்பானவர்கள் அனைவரும் பொறுப்புக் கூற செய்யப்பட வேண்டும்.

நீங்கள் எவ்வளவு வெளிப்படையாகவும், விரைவாகவும் செயல்படுகிறீர்கள் என்பதில் தான் உங்கள் அரசாங்கத்தின் மற்றும் அந்த அறக்கட்டளையின் நம்பகத்தன்மை அடங்கியுள்ளது. இதனை இந்தியமக்கள்உற்றுநோக்கி கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

### லண்டன் பயணம் நிறைவு:

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சென்னை வருகை தொண்டர்கள் உற்சாக வரவேற்பு



சென்னை, ஜூலை 20

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் பேரனும், உதயநிதி ஸ்டாலினின் மகனுமான இன்பநிதி, லண்டன் மான்செஸ்டர்நகரில்உள்ள பல்கலைக்கழகத்தில் விளையாட்டு மேம்பாட்டு தொடர்பான பட்டப்படிப்பை படித்து முடித்தார். இன்பநிதியின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக மு.க.ஸ்டாலின் தனதுமனைவிதுர்காவுடன் கடந்த 4ந்தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் லண்டன் புறப்பட்டு சென்றார். அப்போது அவர், 2 வாரங்கள் லண்டனில் தங்கி இருப்பேன் என்று தி.மு.க.வினருக்கு எழுதிய கடித வடிவிலான அறிக்கையில் தெரிவித்தார்.

லண்டன் சென்ற மு.க.ஸ்டாலின் கடந்த 14ந்தேதி அன்றுபட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார். பட்டம் பெற்ற பேரன் இன்பநிதியை கட்டியணைத்து வாழ்த்தினார். இந்த நிலையில் மு.க.ஸ்டாலின் 2 வார கால லண்டன் பயணத்தை முடித்துகொண்டு இன்று இரவு சென்னை திரும்பினார் அப்போது அவருக்கு பொன்னாடை, புத்தகங்கள் வழங்கி முன்னாள் அமைச்சர்கள் வரவேற்றனர். தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் வரவேற்பு கோஷங்கள் எழுப்பி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### நாகர்கோவிலில்

## காங்கிரஸ் கட்சி சார்பில் கையெழுத்து இயக்கம்: எம்.பி தொடங்கி வைத்தார்




நாகர்கோவில், ஜூலை. 20

ஊழல் மற்றும் லஞ்சத்துக்கு எதிராக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்படுத்தி வருகிறது. இதை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகர காங்கிரஸ் கட்சி சார்பில் ராமன் புதூர் புன்னைநகர் சந்திப்பில் மாபெரும் கையெழுத்து இயக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து காங்கிரஸ் நிர்வாகிகள் அனைவரும் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் நவீன்குமார், முன்னாள் மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மண்டல தலைவர்கள் செல்வன், சிவபிரபு, மாமன்ற உறுப்பினர் அனுஷா பிரைட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தேசிய அளவிலான தொடர் மருத்துவக் கல்வி நிகழ்ச்சி



மதுரை, ஜூலை 19,

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், இந்திய குழந்தை மருத்துவ சங்கத்தின் (IAP) குழந்தைகளுக்கான இரத்தவியல் மற்றும் புற்றுநோயியல் பிரிவின் 11வது தொடர் மருத்துவக் கல்வி (CME) திட்டமான 'மதுரம் 2026' நிகழ்வை நடத்தியது. ஜூலை 17 முதல் 19 வரை மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில், குழந்தைகளுக்கான இரத்தவியல், புற்றுநோயியல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவைசிகிச்சை ஆகியவற்றில் சமீபத்திய நவீன முன்னேற்றங்கள் விளக்கப்பட்டன.

குழந்தை பருவ இரத்தக் கோளாறுகள் மற்றும் புற்றுநோய் துறையில் உலகளவில் புகழ்பெற்ற கிட்டத்தட்ட 100 தேசிய மற்றும் சர்வதேச மருத்துவ நிபுணர்களுடன், முதுநிலை மருத்துவ மாணவர்கள், பொது மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், குடும்ப மருத்துவர்கள், சிறப்பு நிபுணர்கள் மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்கள் என சுமார் 500 பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். குழந்தை நல மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள் மற்றும் குடும்ப மருத்துவர்களுக்கு இத்துறையின்சமீபத்திய அறிவியல், தொழில்நுட்ப மற்றும் மருத்துவ முன்னேற்றங்கள் குறித்த விழிப்புணர்வை வழங்கும் நோக்கில் பிரத்யேக அமர்வுகளும் குழு விவாத்களும் நடத்தப்பட்டன.

'மதுரம் 2026' மருத்துவக் கல்வி மாநாட்டை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு மின்சக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. R. நிர்மல் குமார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் S. குருசங்கர்; மதுரை மருத்துவக் கல்லூரியின் குழந்தைகள் நல பிரிவின் முன்னாள் இயக்குநரும், ஓய்வுபெற்ற பேராசிரியருமான டாக்டர் பாலசங்கர்; IAP குழந்தைகளுக்கான இரத்த புற்றுநோயியல் பிரிவின் தலைவர் டாக்டர் சத்யா P. யாதவ் மற்றும் கௌரவச் செயலாளர்டாக்டர்ஸ்வேதாபன்சால்; மற்றும் மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவ நிர்வாகி டாக்டர் B. கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இம்மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவிற்கு முதுநிலை புணர் டாக்டர். காசி விஸ்வநாதன் தலைமை ஏற்க, மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் குழந்தைகளுக்கான இரத்த புற்றுநோயியல் துறையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் டாக்டர் அன்னபூரணி, டாக்டர் அனிதா மற்றும் டாக்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் இதன் முதன்மை உறுப்பினர்களாகச் செயல்பட்டனர். மீனாட்சி மிஷன் மருத்துவமனைத் தலைவர் டாக்டர் S. குருசங்கர் தனது உரையில் குறிப்பிட்டதாவது: "ஒரு மருத்துவமனை என்பது அதன் பிரமாண்டமான கட்டிடங்கள் அல்லது அதிநவீன உள்கட்டமைப்புகளுக்காக அறியப்படலாம்; ஆனால் அதன் உண்மையான பலம் என்பது அங்கிருக்கும் மருத்துவர்களின் நிபுணத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் கனிவான மனிதநேயத்தில் தான் உள்ளது. ஏனெனில் அவர்கள் தான் சமூகத்திற்கு ஆரோக்கியத்தையும், நம்பிக்கையையும், வாழ்க்கையையும் மறுபடியும் வழங்குகிறார்கள்.

### விருபாட்சிபுரத்தில்

## வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்கம் 17 ஆம் ஆண்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது



வேலூர், ஜூலை 20

வேலூர் மாவட்டம் வேலூர் அடுத்த விருப்பாட்சிபுரத்தில் உள்ள விஜயலட்சுமி தனியார் திருமண மண்டபத்தில் வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்க 17 ஆம் ஆண்டு விழா சங்கத் தலைவர் திருஞானம் துணைத் தலைவர்கள் சீனிவாசன், அசோகன், செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் பொருளாளர் நாராயணசாமி துணைச் செயலாளர்கள் முருகன், முனுசாமி முன்னிலையில் நடைபெற்றது மேலும் காட்பாடி கிளை தலைவர் விநாயகம் பொருளாளர் வேல்முருகன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்

இதில் சிறப்பு அழைப்பாளராக ஆர்.டி.பழனி கலந்துகொண்டு வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்கத்தின் 17 வது ஆண்டு விழாவினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்

இதில் தச்சு தொழிலாளர்களின் புது மனை புகு விழாவிற்கு அன்பளிப்பு, கல்வி உதவித் தொகை, திருமண உதவி தொகை, மஞ்சள்நீராட்டு விழா அன்பளிப்பு விபத்து முதலுதவி தொகை 2000 ரூபாய், உறுப்பினர்களின் வாரிசுகளுக்கான ஈமச்சடங்கிற்கு 2000 ரூபாய் மேலும் புதிதாக சங்கத்தில் சேர்ந்த உறுப்பினர்களுக்கு புதிய உறுப்பினர் அட்டை உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டன

இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட தச்சு தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர் கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்து உபசரிப்பும் வழங்கப்பட்டது .



## ரயில்வே பயணிகள் சங்க நிர்வாகிகளுடன் ரயில்வே திட்டங்கள் குறித்து எம் பி கலந்தாலோசனை

நாகர்கோவில், ஜூலை. 20

கன்னியாகுமரி மாவட்ட ரயில்வே பயணிகள் சங்க நிர்வாகிகளுடன் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் சந்தித்து பல்வேறு ரயில்வே திட்டங்கள், ரயில் நிறுத்தங்கள், புதிய ரயில்களின் தேவைகள், ரயில்கள் நீட்டிப்பு குறித்து கலந்தாலோசனை செய்தார்.

நாகர்கோவில் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில், வேளாங்கண்ணிக்கு தினசரி ரயில் சேவை, நாகர்கோவில் டவுன்மற்றும்சந்திப்பு ரயில் நிலையங்களுக்கு 4 வழி சாலையிலிருந்து இணைப்பு சாலைகள், குழித்துறை ரயில் நிலைய விரிவாக்கம்,

இரணியல் ரயில் நிலைய பணிகளை விரைவில் முடிக்க வேண்டும், திருநெல்வேலி வந்தே பாரத் ரயிலை நாகர்கோவில் வரை நீட்டிப்பது,

குழித்துறை ரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வேண்டும், நாகர்கோவில் டவுன் ரயில் நிலையத்திலிருந்து தக்கலை வரை செல்லும் வகையில் பேருந்து வசதி, ரயில் நிலையத்தில் பார்க்கிங் கட்டணம் அதிகரிப்பு போன்ற பல கருத்துக்கள் குறித்து கலந்தாலோசிக்கப் பட்டது.

பாராளுமன்ற கூட்ட தொடருக்காக டெல்லி செல்லும் பொழுது அமைச்சர் மற்றும் ரயில்வே துறை அதிகாரிகளிடம் இந்த கோரிக்கைகள் முன் வைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் உறுதி அளித்தார்.

இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர் அல் அமீன், ஸ்ரீராம், எட்வர்ட் ஜெனி, ஜெயகுமார்,கிருஷ்ணதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிலே யாரும் இதுவரை நிகழ்த்தாத போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பரதநாட்டிய மாரத்தான் நிகழ்ச்சி



கோவை ஜுலை:20

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியைச் சேர்ந்த ரங்காஸ் அகாடமி பரதநாட்டிய பள்ளியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிராக " டான்ஸ்சத்தான் "என்னும் பரதநாட்டியம் ஆடியப்படியே மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி கருமத்தம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து துவங்கி,2 கிலோ மீட்டர் தூரம் வரை நடைபெற்றது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ரங்காஸ் பரதநாட்டிய பயிற்சி பள்ளியின் நிறுவனர்,நடன ஆசிரியர் சுபா வசந்த் கூறுகையில்,தற்பொழுது அதிகரித்து வரும் போதை கலாச்சாரத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினரும் தங்களது விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.தமிழ்நாடு அரசும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர்.இது போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளிலில் எங்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், பரதநாட்டியத்தின் மூலம் போதை பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என கருதி,எங்களது நடனப் பள்ளியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த மூன்று வார குறுகிய கால இடைவேளையில்,தொடர்ந்து பயிற்சி எடுத்து,இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி உள்ளோம்.

2 கிலோமீட்டர் வரை பரதநாட்டியம் ஆடிக்கொண்டே மாரத்தான் என்பது மிகவும் கடினமான ஒன்று.இருப்பினும் இதை முழு மனதோடு ஏற்று நாங்கள் இந்த நிகழ்ச்சி நடத்தியுள்ளோம்.3 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் இதில் பங்கேற்றனர்.இந்தியாவில் இதுவரை போதைப் பொருளுக்கு எதிராக யாரும் இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்தியதில்லை.

முதல் முறையாக எங்களது நடன பள்ளி மூலமாக இந்த நிகழ்ச்சியை நடத்தி உள்ளோம்.மேலும் இதுபோன்று போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை விரிவுபடுத்தி,தமிழக அரசும்,கோவை மாவட்ட நிர்வாகம் அனுமதியளித்தால் அரசு மற்றும் தனியார்பள்ளி மாணவர்களைஅழைத்து கோவையில் மிகப்பெரிய அளவில்போதைப்பொருளுக்குஎதிரான கின்னஸ் சாதனை படைக்க முயற்சி செய்வோம்.மேலும் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை கண்காணிக்க வேண்டும்.அவ்வாறு கண்காணிக்க தவறுவதே போதைப் பழக்கத்திற்கு வழிவகுத்து வருகிறது. மேலும் இந்த நிகழ்ச்சி நடைபெற உறுதுணையாக இருந்த கருமத்தம்பட்டி காவல்துறை,கிங் உடற்பயிற்சி கூடம்,ஸ்ரீ கவி பியூட்டி பார்லர்,மாணவர்களின் பெற்றோர்கள்அனைவருக்கும்நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

# லஞ்சம் தவிர... நெஞ்சம் நிமிர்: முதுகுளத்தூரில் காங்கிரஸ் கையெழுத்து இயக்கம்



முதுகுளத்தூர், ஜூலை 20

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில், வட்டார காங்கிரஸ் கட்சி சார்பில் "லஞ்சம் தவிர... நெஞ்சம் நிமிர்" என்ற தலைப்பில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் ஞாயிற்றுக்கிழமை காந்தி சிலை அருகே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு முதுகுளத்தூர் நகர காங்கிரஸ் தலைவர் சாகுல் ஹமீது தலைமை தாங்கினார். நகர செயலாளர் சையது மீரா முன்னிலை வகித்தார். முகைதீன் சையது வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளராக மாநில செயலாளர் சோ. ரங்கநாதன் கலந்து கொண்டு, ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்வில் கீரனூர் புவனேஸ்வரன், வட்டார தலைவர் முனீஸ்வரன், செந்தில், வென்னீர் வாய்க்கால் சந்திரபோஸ், தேரிருவேலி நாகலிங்கம் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கையெழுத்திட்டு ஆதரவு தெரிவித்தனர்.

முடிவில் பாலா சஞ்சய் நன்றியுரை வழங்கினார்.

# மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் ஆய்வு செய்தார்



கடலாடி, ஜூலை. 20

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மூக்கையூரில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத் தளத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மீன்பிடித் துறைமுகத்தின் தற்போதைய செயல்பாடுகள், மீனவர்கள் பயன்படுத்தும் வசதிகள், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் அமைச்சர் விரிவாக கேட்டறிந்தார். மேலும், துறைமுக வசதிகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார். ஆய்வின்போது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., உடனிருந்து ஆய்வில் பங்கேற்றார். துறை சார்ந்த உயரதிகாரிகள் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 3 பேர் கைது



திருச்சி, ஜூலை 20

திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரசு அண்ணா கலைக் கல்லூரி அருகே உள்ள பேருந்து நிறுத்தத்தில் உடலுக்கும் மனதிற்கும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய அரசியல் தடை செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கெட்டுப்போன கஞ்சாஇலைதுகள்களைவிற்பனைசெய்யவைத்திருந்த 1. திவாகர் வயது 19 S/o பாலமுருகன் வன்னியர் நகர் எம்டி சாலை துவாக்குடி மலை தெற்கு 2. சகாயராஜ் வயது 22 S/o சவரிமுத்து அண்ணாநகர் எம்டி சாலை துவாக்குடி மலை தெற்கு 3. பிரேம் வயது 25 S/o பன்னீர்செல்வம்வஉசிநகர்மலைக்கோயில்திருவரம்பூர் மூன்று எதிரிகளையும்.துவாக்குடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் நாகராஜ் மற்றும் தனிப்படை காவலர்கள் கணேசன் ,பிரசாத் ஆகியோரால் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 100 கிராம் கஞ்சா துகள்கள் கைப்பற்றப்பட்டு அவர்கள் மீது துவாக்குடி காவல் நிலையத்தில் கஞ்சா விற்பனை செய்த வைத்திருந்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு எச்சரிக்கை செய்து இரு நபர் ஜாமினில் விடுவிக்கப்பட்டனர்.....

# திருச்சியில் இரு வேறு விபத்துகளில் கல்லூரி மாணவர், குழந்தை பலி



திருச்சி, ஜூலை 20

திருச்சி திருவெறும்பூர் காந்தி நகர் 5வது தெருவை சேர்ந்தவர் குத்தூஸ். இவரது மகன் அர்ஷீத் (வயது 21) இதேபோன்று காந்திநகர் ஆறாவது தெரு பகுதியை சேர்ந்தவர் மார்க்கோ இவரது மகன் பிரடி (வயது 21). இருவரும் திருச்சியை அடுத்த துறையூர் தனியார் பொறியியல் கல்லூரியில், இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளார்கள்.

இதையடுத்து இருவரும் கல்லூரி திறக்கும் முதல் நாளான இன்று இருவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் கல்லூரிக்கு புறப்பட்டனர். அப்பொழுது இரு சக்கர வாகனத்தை பிரடி ஓட்டினார், பின் சீட்டில் அர்ஷீத் அமர்திருந்தார். இவர்கள் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில், திருவெறும்பூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அரியமங்கலம் எஸ்.ஐ.டி மைதானம் எதிரே, பின்னால் வந்த ஆமினி பேருந்து இவர்களை முந்திச் செல்ல முயன்றது. அதே நேரத்தில், எதிர்புறம் ஒருவழிப்பாதையில் ஆட்டோ ஒன்றும் வந்துள்ளது.

இவற்றுக்கு இடையே நிலைதடுமாறிய இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் பேருந்தின் சக்கரத்தில் சிக்கி, சம்பவ இடத்திலேயே அர்ஷீத் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்தில் படுகாயமடைந்த அவரது நண்பர், திருச்சி அரசு பொது மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து போக்குவரத்து தெற்குப் புலனாய்வுப் பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கல்லூரி திறக்கும் முதல் நாள், வாழ்வின் இறுதி நாளாக மாறிய துயரம் இறந்த மாணவனின் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேபோல் திருச்சி பொன்மலைப்பட்டி அடைக்கல மாதா கோவில் தெருவை சேர்ந்தவர் காணிக்கை ராஜ். இவர் அந்தப் பகுதியில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் இன்று அதிகாலை சுமார் 5 மணி அளவில் வெளியூர் செல்வதற்காக தனது வீட்டிலிருந்து காரை வெளியே எடுத்து அந்த பகுதியில் உள்ள அடைக்கல மாதா கோவில் கிறிஸ்தவ ஆலயம் முன்பு நிறுத்த எடுத்து சென்றார். அப்போது அந்த பகுதியில் வசிக்கும் ரூபன் என்பவரின் மகன் விஜோஜாய் (வயது 3)என்ற குழந்தை வீட்டில் இருந்து வேகமாக ஓடி வந்து சாலை அருகே உள்ள அடைக்கல மாதா கோவிலுக்கு சென்றார். குழந்தை சென்ற சில நிமிடங்களுக்கு பிறகு தொடர்ந்து அவரது பாட்டியும் வேகமாக சென்றார். அப்பொழுது அங்கு கார் நிறுத்த சென்ற காணிக்கைராஜ் காரை பின்னோக்கி இயக்கியபோது திடீரென்று எதிர்பாராத விதமாக குழந்தை விஜோ ஜாய் மீது மோதியது.

இந்த விபத்தில் காரின் பம்பரில் மோதி சாலையின் கீழே விழுந்ததில் குழந்தை விஜோ ஜாய் தலையில் பலத்த காயமடைந்து மயங்கி விழுந்தார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த ஆசிரியர் காணிக்கைராஜ் மற்றும் குழந்தையின் பாட்டி, பெற்றோர், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்உ டனடியாக குழந்தை விஜோ ஜாய்யை அதே காரில் ஏற்றிக்கொண்டு திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு குழந்தையை பரிசோதனை செய்து பார்த்த டாக்டர், குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்.

இந்த விபத்து சம்பவம் குறித்து கண்டோன்மென்ட் தெற்கு போக்குவரத்து புலனாய்வு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மேலும் பிரேத பரிசோதனைக்காக குழந்தையின் உடல் திருச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த சம்பவம் குறித்து கண்டோன்மென்ட் தெற்கு போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திருச்சியில் இன்று காலை ஒரே நேரத்தில் கல்லூரி மாணவர் ஒருவரும் குழந்தை ஒருவரும் பலியான சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.



சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஈங்கூர் தாட்கோ பின்னாலாடை தொழிற்பேட்டைகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# பல துறைகளில் லஞ்சம் தவிர்க்கப்பட வேண்டும் முன்னாள் மத்திய அமைச்சர் ப சிதம்பரம் பேச்சு

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் மாடல் அரசை யாராலும் கொண்டு வர முடியவில்லை தற்பொழுது முதல்வர் விஜய் அதை தொடங்கி இருக்கிறார் அது நல்ல துவக்கம் மிகவும் நம்பிக்கையாக இருக்கிறது நேர்மையான ஆட்சியாகவழங்குவார்வழங்கமுயற்சிக்கிறார் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் பேச்சு

மதுரை நாகமலை புதுக்கோட்டை எஸ் வி என் கல்லூரியில் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர் என்ற தலைப்பில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு கல்லூரியின் மைதானத்தில் 2,500 மாணவர்கள் ஒன்று சேர்ந்து அணிவகுத்து காமராஜரின் உருவம் தெரியும் வண்ணம் நின்றனர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய அமைச்சர் ப சிதம்பரம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் பேசும் போது:

ஒரு வாரமாக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா நடைபெறுகிறது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட மாணிக்கம் தாகூர் என சிறப்பாக நடத்தி வருகிறார் அவருக்கு பாராட்டுக்கள். 9 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார் ஒன்பது ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் லஞ்சம் என்பதே கிடையாது லஞ்சம் தவிர்த்து ஆட்சி நடந்தது. புதிதாக பொறுப்பேற்ற ஆட்சியில் லஞ்சம் தவிர்க்கும் முயற்சியில் நடைபெறுகிறது பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்சம் தவிர்க்கப்பட்டிருக்கிறது அதற்காக பாராட்டுக்கள். தனியார் உதவி பெறும் பள்ளியில் அரசு பள்ளிகள் அரசு நியமனம் போன்றவற்றில் லஞ்சம் தவிர்க்கப்படுகிறது. ஆசிரியர் பணி நியமனம் மாறுதல் உள்ளிட்டவைகளுக்கு லஞ்சம் தவிர்க்கப்பட்டுள்ளது. இன்னும் பல துறைகளில் லஞ்சம் தவிர்க்கப்பட வேண்டும் அதற்கு முதல்வர் விஜயின் ஆட்சி செய்யும்.

லஞ்சம் தவிர்க்க காமராஜர் ஆட்சி 9 ஆண்டுகள் எப்படி செயல்பட்டதோ அதேபோல் விஜய் ஆட்சியை கடந்த ஒரு மாதமாக நல்ல முயற்சி எடுத்து வருகிறது. இன்னும் பல முயற்சிகள் எடுத்து பல துறைகளில் பஞ்சங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு விஜய் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள் தமிழ்நாட்டில் மீண்டும் லஞ்சம் தவிர்த்த காமராஜர் ஆட்சி ஐந்தாண்டு நடைபெற வேண்டும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை பாராட்டுக்கள் பெருந்தலைவர் காமராஜரின் புகழ் வாழ்க ஓங்குக.

நிகழ்ச்சியில்தமிழககாங்கிரஸ்கமிட்டி தலைவரும் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்பி மாணிக்கம் தாகூர் பேசும் போது:

வெயிலில் நின்று கொண்டிருக்கிறீர்கள் விட்டமின் டி உங்களுக்கு நன்றாக கிடைக்கிறது.பெருந்தலைவர் காமராஜர்அவர்கள்வாழ்நாள்முழுவதும்கல்வி போன்றவற்றில் முக்கிய முயற்சி எடுத்தார்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் மாடல் அரசை யாராலும் கொண்டு வர முடியவில்லை தற்பொழுது முதல்வர் விஜய் அவர்கள் அதை தொடங்கி இருக்கிறார். அது நல்லதுவக்கம் மிகவும் நம்பிக்கையாக இருக்கிறது. நேர்மையான ஆட்சியாக வழங்குவார் வழங்க முயற்சிக்கிறார். அதற்காக விழாவிற்கு வந்த முன்னாள் நீதி அமைச்சர் காங்கிரஸ் கட்சியின் காரிய கமட்டி உறுப்பினர் சிதம்பரம் அவர்களுக்கும் முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருநாவுக்கரசர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



# பெருந்தலைவர் காமராஜரின் 124 வது பிறந்தநாள் விழா

திருப்பூர்ஜூலை: 20

பெருமாள் நல்லூர் மரியபுரம் வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பில் தலைவர் கருப்புசாமி நெம்பர்பழனிச்சாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பி. கோபால்சாமி முன்னாள் மாவட்ட தலைவர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ஆர் .கிருஷ்ணன் அவர்களும் மாணவர் மாவட்ட துணை தலைவர் கதிரேசன் ஆறாவது வார்டு தலைவர் கிருஷ்ணதாஸ் மற்றும் முன்னணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர் என்ற கையெழுத்து இயக்கமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.



## திருச்சியில்
# மேகதாட்டுவிற்கு நடுவர் மன்றம் கோருவதை பாராளுமன்றத்தில் திமுக கைவிட வேண்டும்: பி.ஆர். பாண்டியன் அறிவிப்பு

திருச்சி, ஜூலை 20

காவிரி டெல்டா விவசாயிகள் நலன் கருதி மேகதாட்டு விற்கு நடுவர் மன்றம் கோருவதை பாராளுமன்றத்தில் திமுக கைவிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புகுழு தலைவர் பி.ஆர். பாண்டியன் தெரிவித்துள்ளார்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள கலையரங்கம் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இன்று காலை திருச்சி வந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புகுழு தலைவர் பி.ஆர்.பாண்டியன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்டும் முயற்சியை கர்நாடக அரசு கைவிட வேண்டும்.

இது குறித்து இந்திய நாடாளுமன்ற மக்களவையில் திமுக உறுப்பினர் டி.ஆர். பாலுவும் மாநிலங்களவையில் திருச்சி சிவாவும், கொண்டு வந்திருக்கின்ற மேகதாட்டு குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வரவேற்கிறோம்.

தற்போது பாராளுமன்ற ஒத்திவைப்பு தீர்மாண விவாதத்தின்போதுமீண்டும்நடுவர்மன்றம்கோருவதை கைவிட வேண்டுமென காவிரி டெல்டா விவசாயிகள் சார்பில் வலியுறுத்துகிறேன். அப்படி வலியுறுத்தினால் கீழ்பாசன விவசாயிகளான தமிழக விவசாயிகள் அனுமதியின்றி நீர்தேக்கமோ, புதிய அணைகளோ கட்டக் கூடாது என்ற காவிரி நடுவர் மன்ற இரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியதை அடுத்து மத்திய அரசிதழில் வெளியிட்டதற்கு எதிராக அமைந்துவிடும்.

காவிரி டெல்டாவில் சென்ற 2025ம் ஆண்டு 6.31 லட்சம்ஏக்கர்சாகுபடிமேற்கொண்டோம்.நடப்பாண்டு 2 லட்சம்ஏக்கராக குறுவைகுறைந்துவிட்டது.தற்போது சம்பா சாகுபடியும் கேள்விக் குறியாகி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஆய்வு செய்யத் தமிழக அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அனுப்பி பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட வேண்டும். ஏற்கனவே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கியதை பின்பற்றி ஏக்கர் 1க்கு ரூ 15000 ம் நிவாரணம் அறிவிக்க வேண்டும்.

நடப்பாண்டில் மேட்டூர் அணை திறக்க வாய்ப்புள்ளதா? சம்பா நெல் பயிர் சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்வதா? வேண்டாமா? நேரடி விதைப்பு செய்வதா? என்பதற்கான வழிகாட்டுதலை தமிழக அரசு வழங்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் பற்றாக்குறை காலத்தில் கர்நாடகம் தமிழகம் தண்ணீர் பங்கீட்டுக் கொள்வதற்கான வழிமுறையை பின்பற்றி வரும் 22ம் தேதி நடைபெற உள்ள 53வது காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் பெற்றுதர தமிழக அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

காவிரி நீரை விடுவிக்க கர்நாடகம் மறுத்தால், தமிழகத்திற்கு இழப்பீட்டுத் தொகையைக் கர்நாடக அரசிடமிருந்து பெற்றுத்தர தமிழக அரசு காவிரி ஆணையத்திற்கு அழுத்தம் கொடுத்து பெற வேண்டும் என பி.ஆர்.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது மாநில துணைத் தலைவர் திருச்சி பாரூக், மாநில இளைஞரணி தலைவர் மேலூர் அருண், செயலாளர் ஒக்கநாடு மகேஸ்வரன், முசிறி யோகநாதன், கோட்டூர் தெற்கு ஒன்றிய செயலாளர்தெய்வமணி உள்ளிட்டோர்உடனிருந்தனர்.

# மத்திய பிரதேசத்தில் வண்டுகளை பிடித்தால் ரூ.2 சன்மானம்; சால் மரங்களை பாதுகாக்க வனத்துறை புதிய திட்டம்



போபால், ஜூலை 26

மத்திய பிரதேச மாநிலம் திண்டோரி மாவட்டத்தில் உள்ள சால் வகை காடுகளைப் பாதுகாக்க, வனத்துறை சார்பில் நூதன விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, சால் மரங்களை அழித்து வரும் 'சால் போரர்' வகை வண்டுகளைப் பிடிக்கும் கிராம மக்களுக்கு, ஒரு பூச்சிக்கு ரூ. 2 சன்மானமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைத்துத் தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்று வண்டுகளை பிடித்து வருகின்றனர். காடுகளில் உள்ள மரங்களில் இருந்து பிடிபடும் பூச்சிகளை, 100 பூச்சிகள் கொண்ட மாலைகளாகக் கட்டி, வனத்துறை அமைத்துள்ள சிறப்பு மையங்களில் ஒப்படைத்து மக்கள் பணம் பெற்று வருகின்றனர்.

இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், கடந்த 202627 ஆம் ஆண்டில் சுமார் 30,487 ஹெக்டேர் பரப்பளவு காடுகளும், 1.47 லட்சம் மரங்களும் இந்த பூச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு இதுபோன்ற பாதிப்பு ஏற்பட்டபோது, பெருமளவில் மரங்களை வெட்டி அகற்ற வேண்டியிருந்தது.

தற்போது மீண்டும் அதே நிலை ஏற்படாமல் இருக்க, 'ட்ராப்ட்ரீ' என்றநுட்பத்தைப்பயன்படுத்திபூச்சிகளைக் கவர்ந்து அழிக்கும் முயற்சியில் வனத்துறையினர் இறங்கியுள்ளனர். பூச்சிகளால் கடுமையாக பாதிக்கப்பட்ட 1,46,784 மரங்களை வெட்டி அகற்ற மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மின்வாரியத்திலுள்ள அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்
## அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தல்!!!



திருப்பூர் ஜூலை 20:

மின்வாரியத்திலுள்ள அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தப்பட்டது

டி .என்.ஈ.பி தொழிலாளர் நல முன்னேற்ற சங்க மாநில தலைவர் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன் சென்னை அரசு தலைமை செயலகத்தில்

மின்சாரத்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் மதிப்புக்குரிய நிர்மல்குமார் அவர்களை நேரடியாக சந்தித்து மனு அளித்து கோரிக்கை வைத்தார்.

அப்போது அமைச்சர் ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநியமனம் நீதிமன்ற வழக்கு ஆவணங்களை முழுமையாக ஆராய்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் நல்லாட்சியில் பணிநியமனம் செய்ய ஆணவம் செய்யப்படும் என தெரிவித்தார்.

அமைச்சரிடம் ஈ.பி.அ.சரவணன் அளித்துள்ள மனுவில் மின்வாரியத்தில் கடந்த 20. ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

வர்தா, கஜா, தானே போன்ற பேரிடர் காலங்களில் உயிரை துச்சமாக மதித்து 2 உழைத்த இவர்களின் வாழ்வாதாரம்

தொடர்ந்து கேள்விக்குறியாகவே உள்ளது."

தொழிலாளர் நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் இவர்களை பணி நிரந்தரம் செய்ய உத்தரவிட்டும் இதுவரை ஆணை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் மின்வாரியத்தில் தற்காலிகப் பணியாளர்கள் யாரும் கிடையாது என்றும், அடுத்த 6 மாதங்களுக்கு தற்காலிகமாக ஆட்கள் எடுக்கப்பட்டு பின்னர் டி.என். பி.எஸ். சி. மூலம் 15 ஆயிரம் பணியாளர்கள் நிரந்தரமாக நிரப்பப்படுவார்கள் என்றும் தகவல் வெளியாகியுள்ளதால் ஒப்பந்த தொழிலாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே நீதிமன்ற உத்தரவு பெற்றுள்ள ஒப்பந்த தொழிலாளர்களின் விவரப் பட்டியல்கள் மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ளது.

நீதிமன்ற உத்தரவு விவரங்கள் அனைத்தும் மின்வாரியத்தில் காணாமல் போய் விட்டதா? என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தனி கவனம் செலுத்தி, நீதிமன்ற உத்தரவின்படி மின்வாரியத்தில் உள்ள அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களையும் உடனடியாக பணி நிரந்தரம் செய்ய விரைந்து தீர்வு காண வேண்டுமென டி .என் .ஈ.பி தொழிலாளர் நல முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது.

# தாயுமானவர் திட்டத்தை மறு பரிசீலனை வேண்டும் முதலமைச்சருக்கு கோரிக்கை

ஈரோடு ஜூலை 20

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு தமிழ் நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் மேசப்பன் செயலாளர் மாரிமுத்து ஆகியோர் அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது தாயுமானவர் திட்டம் கடந்த ஆட்சியில் வாக்குகளை கவரும் வகையில் கொண்டு வரப்பட்ட கவர்ச்சி திட்டமாகும் . இந்த திட்டத்தினால் பொது மக்களுக்கு எந்த பயனும் இல்லை.

நடக்க முடியாதவர்கள் வயோதிகர்கள் நோயாளிகள் மாற்றுத்திறனாளிகள் என அடையாளம் காணப்பட்டு இந்த தாயுமானவர் திட்டத்தில் சேர்க்கப்பட்டால் அரசுக்கு நற்பெயர் பெயர் ஏற்படும். ஆனால்அதற்குமாறாகவசதிமிக்கவர்கள் நன்றாக நடந்து செல்பவர்களை இந்த திட்டத்தில் சேர்த்துள்ளனர். இந்த திட்டத்தினால் பணியாளர்கள் ஏராளமான சிரமங்களை சந்திக்க வேண்டி உள்ளது .பல்வேறு சிரமங்களை மேற்கொள்ளும் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதில் கருத்தில் கொண்டு தாய்மார்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் இருப்பினும் திட்டத்தை தொடர வேண்டும் என்று விரும்பினால் முதலமைச்சர் அறிவித்தது போல ரேஷன் பொருட்களை பாக்கெட் செய்து கொடுத்தால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

எனவே இந்த திட்டத்தை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது .

# பட்டியலின மக்கள் வீட்டின் ஓடுகளை சேதப்படுத்தி முதியவர் ஒருவரை காயப்படுத்திய சம்பவத்தில் மூவர் கைது



மதுரை, ஜூலை 20

மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அருகே காயம்பட்டி கிராமத்தில் அதிகாலை வாக்குவாதம் காரணமாக ஏற்பட்ட தகராறில் முதியவர் ஒருவர் காயமடைந்தார். இது தொடர்பாக 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

இன்று அதிகாலை சுமார் 3.00 மணியளவில் பட்டியலின இளைஞர்கள் இருவருடன் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக, மாற்று சமுதாய இளைஞர்கள் மூன்று பேர் அவர்களை அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் தொடர்ந்து சென்று தாக்க முற்பட்ட போது, அங்கு படுத்திருந்த முதியவரான சுப்பன் என்பவரை ஆயுதத்தால் தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், அப்பகுதியில் உள்ள 4 வீடுகளின் ஓடுகளை சேதப்படுத்திவிட்டு குற்றவாளிகள் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு மதுரை சரக காவல் துறை துணைத்தலைவர் அபினவ் குமார் மற்றும் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் இச்சம்பவத்தில் ஈடுபட்ட, காயம்பட்டி காலனி இப்போதைய சேர்ந்த ராமர்,லட்சுமன் மற்றும் பிரவீன் ஆகியோர் உடனடியாக கைது செய்யப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு பாதுகாப்பை பலப்படுத்தும் விதமாக போலீஸார் அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இது போன்ற ஜாதி ரீதியான மோதலில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குண்டர் தடுப்பு சட்டத்தில் அடைக்கப்படுவார்கள் என்று மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதன் எச்சரித்துள்ளார்.

## மதுரை அய்யர்பங்களா பகுதியில் உள்ள
# திமுக வடக்கு மாவட்ட அலுவலகத்தில் பத்திரப்பதிவுத்துறை முன்னாள் அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.



பழனி கோவிலுக்கு சொந்தமான இடத்தை பத்திரப்பதிவு செய்து நில மோசடி நடந்துள்ளது. இதில் யார் உடந்தையாக இருந்தார்கள் என்பதை பற்றி விவாதம் எழுந்துள்ளது. இது குறித்து அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர். காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

கோவில்கள் இடத்தை பதிவே செய்ய முடியாது , கோவில் நிலம் , அரசு நிலம், நீர்நிலை, வக்பு இடங்கள் குறித்து பத்திரப்பதிவு அலுவலக ஆவணங்களில் பதிவு செய்ய முடியாது என குறிப்பிடப்பட்டிருக்கும்,

அதேபோன்று கோவில் நில பத்திரப்பதிவுக்கு முதல்நாளே டோக்கன் போடப்பட்டிருக்கும் எனவே பழனி கோவில் நில பத்திரப்பதிவு தெரியாமல் நடைபெற வாய்ப்பில்லை

இது குறித்து அமைச்சர் நிர்மல்குமார் நேரடியாக பதில் சொல்லாமல் கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் பதிவுத்துறையில் முறைகேடு என்கிறார்.

கடந்த 5 ஆண்டுகளில் பத்திரப்பதிவு அலுவலங்களில் யாரும் பத்திரப்பதிவு செய்யுங்கள் யாருக்கும் யாரும் சொன்னது கிடையாது , சில தவறுகள் நடந்த போது அப்போது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது

கடந்த 5 ஆண்டுகளில் முறைகேடு குறித்து புகார் வந்திருந்தால் அப்போதே அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

589 பத்திரப்பதிவு அலுவலகத்தில் நான் எனது ஆளை போட்டதாக கூறுகின்றார்; பொறுப்புள்ள அமைச்சர் இது போன்ற பொதுவாக பேசக்கூடாது

சட்டத்துறையில் வழக்கறிஞர்கள் நியமனத்தில் லஞ்சம் பெறுவதாக அவரது கட்சியை சேர்ந்தவரே நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் அவரை கட்சியில் இருந்து நீக்கியுள்ளனர்.

நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்திப்பதே வேலையாக பார்த்துவருகிறார், முதலமைச்சர் போல நிழல் முதல் அமைச்சராக நிர்மல்குமார் செயல்படுகிறார் அனைத்து துறைக்கும் பதிலளிக்கிறார்

அறநிலையத்துறை இடத்தை பதிவு செய்ய முடியாது ஆனால் எப்படி பதிவு செய்தனர் குறிப்பாக ஒரு பதிவாளரை இடமாற்றி பதிவு செய்துள்ளனர்

என் மீதான குற்றச்சாட்டை ஆதாரத்தோடு சொல்லுங்கள் என்றார்.

ஆட்சிக்கு வந்தவுடன் லஞ்சம் இருக்காது என்றனர், 60 பத்திரபதிவு ஆபிசில் ரைடு நடத்தி 37 லட்சம் கைப்பற்றினார்கள், நகராட்சி அலுவலகங்களில் 31 லட்சம் கைப்பற்றினார்கள் அதற்கு என்ன பதில் இதற்கு யார் பொறுப்பாவது என்றார்.

அமைச்சர் தனது இரு துறை சார்ந்த பிரச்சனைகள் குறித்து பேச வேண்டும் மின் கட்டணம் உயர்ந்துள்ளது.

கூட்டணி தொடங்கி அனைத்து துறைகள் குறித்து ஆல் இந்தியா அளவில் பேசுகிறார் பிரச்சனையை திசை திருப்புகிறார் அமைச்சர் நிர்மல்குமார்

கடந்த 5 ஆண்டுகளில் பத்திரப்பதிவுத் துறையில் தவறு நடந்தால் மேலதிகாரிகளே உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துவிடுவார்கள்; எல்லா ஆட்சிகாலத்திலும் ஒரே அதிகாரிகள் தான் பணியில் உள்ளனர்

589 பத்திரபதிவு அலுவலகங்களில் எந்த இடத்தில் எனக்கு கட்டிங் கொடுத்தார்கள் எனவும் என் மூலமாக பத்திரப்பதிவு செய்யப்பட்டதற்கான ஆதாரத்தை அமைச்சர் நிர்மல்குமார் கூற வேண்டும்

நிலங்களுக்கான வழிகாட்டு மதிப்புகளை அமைச்சர் தீர்மானிக்க முடியாது , அதிகாரிகள் தான் முடிவெடுப்பார்கள்

வணிகவரித்துறையில் லீக்கேஜ் என நிதித்துறை செயலர் கூறியுள்ளார் அவர் இருக்கும் போது தான் வருவாய் பெருக்க திட்டம் தீட்டப்பட்டது

யார் கூடுதலாக Guideline மதிப்பு இருக்கிறதோ அதனடிப்படையில் தான் நில மதிப்பீடு பதிவு செய்யப்படும்

பத்திரப்பதிவுத்துறையில் 2021 ல் 10 ஆயிரம் கோடி இருந்த 2026 மார்ச் 25 ஆயிரம் கோடியாக படிப்படியாக ஆண்டுக்கு ஆண்டு வருவாய் உயர்ந்துள்ளது

வணிகவரித்துறையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் 2021ல் 96 ஆயிரம் கோடியாக இருந்த வருவாய் 2026 1 லட்சத்தி 43 ஆயி'ரம் கோடியாக வருவாய் வந்துள்ளது.

செய்தியாளர்களை மிஞ்சி எதுவும் இல்லை, அதனால் உங்களுடன் விளக்கம் அளிக்கிறேன்

என் மகன் திருமணம் குறித்து அமைச்சர் நிர்மல்குமார் பேசுகிறார் ; அமைச்சர் நிர்மல்குமார் எப்படி கல்யாணம் பண்ணினாருனு தெரியவில்லை; அவருக்கு என் மீது என்ன பிரியம் என தெரியவில்லை

48 ஆண்டுகள் திமுகவில் உள்ளேன் ஒரே கட்சியில் 48 வருடமாக பொறுப்பில் உள்ளேன்,

ஆனால் அமைச்சர் நிர்மல்குமார் அதிமுகவில் இருந்தார். பின்னர் மாறினார் திருப்பரங்குன்றம் விவகாரத்தில் என்ன சொன்னார் எப்படி பேசினார் என தெரியுமா?

பழனி விவகாரத்தில் 100% டோக்கன் போட்டால் தான் பதிய முடியும் இரவு 9 மணிக்கெல்லாம் பதிவுசெய்ய முடியாது

ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகங்களிலும் எந்தெந்த நிலங்களை பதிய...



தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலாளரும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நீர் வளத்துறை அமைச்சருமான புஸ்ஸி N. ஆனந்த் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். எம். கோபிசன் அவர்களின் தலைமையில், தெற்கு சட்டமன்றத் தொகுதி 43வது வார்டு தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த எஸ். அரிராமகிருஷ்ணன் அவர்களின் ஏற்பாட்டில் இன்று நாள் முழுவதும் உணவு வழங்கப்பட்டது.



கிருஷ்ணகிரியில் நடைபெற்று வரும் 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நாகமங்கலம் பள்ளி மாணவர்கள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார் . ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நாகமங்கலம் பள்ளி மாணவர்களின் சிறப்பான நிகழ்வுகளை கண்டு மாவட்ட ஆட்சியர் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது

## நாகர்கோவில் சிறையில் வியாபாரி கொலை சம்பவம் : கைதான 8 கைதிகள் பாளையங்கோட்டை சிறைக்கு மாற்றம்



நாகர்கோவில், ஜூலை, 20

சாமிதோப்பு அருகே உள்ள ஈத்தங்காடு பகுதியை சேர்ந்தவர் சபரிவர்மன் (33) மாற்றுத்திறனாளியான இவர் அந்தப் பகுதியில் மளிகை கடை நடத்தி வந்தார். அவரது கடையில் தென்தாமரைகுளம் போலீசார் நடத்திய சோதனையில் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதை அடுத்து போலீசாரால் கைது செய்யப்பட்டு நாகர்கோவில் மாவட்ட சிறையில் சபரிவர்மன் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் சபரிவர்மன் சிறையில் வைத்து அடித்து கொலை செய்யப்பட்டார். அவரை மூன்று சிறை வார்டன்கள், 8 கைதிகள் சேர்ந்து கை கால்களை கட்டி வைத்து கொடூரமாக தாக்கி கொலைசெய்து செய்தது விசாரணையில் தெரியவந்தது. இது தொடர்பாக நேசமணி நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து சிறை வார்டன்களாக ஜெகன், சுரேஷ், சிவகுமார் ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் நாகர்கோவில் சிறையில் வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட விசாரணை கைதிகளான விஷ்ணு, சாரதி, ஜெகன், சரத், பெருமாள், சேதுராம், அஜித், அரவிந்த் ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டனர் கைது செய்யப்பட்டனர்.

வார்டன்கள் 3 பேரும் உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டு, கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு நான்குநேரி கிளை சிறை சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர். இதற்கு இடையில் சவரிவர்மன் உடலை உறவினர்கள் 5 நாட்களுக்கு பிறகு பெற்றுக் கொண்டனர். சபரிவர்மன் கொலை வழக்கை விசாரிக்க ஏ டி எஸ் பி கலையரசன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. போலீசார் சபரிவர்மன் குடும்பத்தினர் மற்றும் கைதாகி நாகர்கோவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 8 கைகளிடம் தனித்தனியாக விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் சபரிவர்மன் கொலை தொடர்பாக பல முக்கிய தகவல்கள் தனிப்படை போலீசாருக்கு கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து கைதாகி இருக்கும் 8 கைதிகளையும் வேறு சிறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. அதன்படி அவர்கள் 8 பேரும் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனர். அவர்கள் சிறையில் இருந்து பலத்த போலீஸ் பாதுகப்புடன் அழைத்துச்செல்லப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.




வேப்பனஹள்ளியில் விவசாயிகள் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கமும் இணைந்து

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கைகளில் கருகிய பயிர்களுடன் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை 20

வேப்பனஹள்ளியில் விவசாயிகள் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கமும் இணைந்து மேகதாது அணை கட்டுவதை மத்திய, மாநில தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கைகளில் கருகிய பயிர்களுடன் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.


கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளியில் விவசாயிகள் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கமும் இணைந்து மேகதாது அணை கட்டுவதை மத்திய,தமிழக அரசுதடுத்து நிறுத்த வேண்டும் என்பதை வழியுறுத்திகைகளில் கருகிய பயிர்களுடன் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் தி.க. கிருஷ்ணன் தலைமையில் நடைப் பெற்ற இத்த ஆர்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் சின்னபையன், மாவட்டச் செயலாளர்களான ஜெயராமன், ரஹ்மத்துல்லாஹ் மாவட்ட பொருளாளர் நாகராஜ் மாவட்ட பொருளாளர் மஹாபூப் அலி ஆகியோர் முன்னிலை வகித்து மேகதாது அணை கட்டுவதினால் தமிழகம் சந்திக்கும் பாதிப்புள் குறித்து விளக்க உரை ஆற்றினார்,

மேலும் இந்த கண்டன ஆர்பாட்டத்தின் போது தமிழத்தினை வஞ்சிக்கும் விதமாக மேகதாது அணை கட்டுதை மத்திய அரசு தடை செய்ய வேண்டும், தென்பெண்ணை ஆற்றில் கெமிக்கல் மற்றும் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும், தமிழக அரசின் தேர்தல் அறிக்கையின்படி தமிழக விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வழியுறுத்தி கண்டன கோசங்களை எழுப்பினார்கள்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைவர் தி.க. கிருஷ்ணன் கர்நாடக அரசு மேகதாட்டில் அணை கட்டுவதால் தமிழத்தில் சுமார் 20 மாவட்டங்கள் தண்ணீர் இன்றி விவசாயம் பாதிக்கப்படும் இதனால் லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுவார், ஆகையால் மத்திய அரசு மேகதாட்டில் அணைக்கட்ட தடை விதிக்க வேண்டும் இல்லையில் தமிழக விவசாயிகளை ஒன்று திரட்டி மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தப் போவதாக தெரிவித்தார், அப்போது விவசாய சங்கத்தினை சேர்ந்த வாசு,இராமசந்திரன்,ரெஜினா,குழந்தை, முனிகான், துரைசாமி, கிருஷ்ணன், ரயில்வே ராமசாமி, யுவராஜ், சதாம் , பார்வதி, சுரேஷ், சிவசங்கர், வரமுனி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்

### நாகர்கோவிலில்

## உயர்ரக போதை பொருளுடன் வாலிபர் கைது: கூட்டாளிகளை பிடிக்க போலீசார் தீவிரம்



நாகர்கோவில், ஜூலை. 20

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் முற்றிலும் ஒழிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் காவல்துறையினர் கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக வடசேரி பகுதியில் போதைப்பொருள் விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

சோதனையில் வடசேரி செட்டுப்புரை தெரு பகுதியை சேர்ந்த ராஜகான் என்பவரின் மகன் ஷாஹீன் கான்(24) என்பவரை கைது செய்த காவல்துறையினர் அவரிடம் இருந்து 0.8 கிராம் அரசால் தடை செய்யப்பட்ட உயர்ரக போதைப் பொருளான எம்டிஎம்எ எனப்படும் மெத்தாபெட்டமைன் பறிமுதல் செய்து வடசேரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது .

இவர் மீது ஏற்கனவே 2021 ஆம் ஆண்டு போதை பொருள் வழக்கும் . ஒரு அடிதடி வழக்கும் உள்ளது. இவரிடம் போலீசார் நடத்திய விசாரணையில் பெங்களூருவில் இருந்து கூட்டாளி ஒருவர் மூலம் மெத்த பெட்டமைன் கிடைத்ததாக கூறியுள்ளார். அதன் பேரில் இவரின் கூட்டாளிகள் தொடர்பாக போலீசார் விசாரணை இறங்கி உள்ளனர்.

3 பேருக்கு இதில் தொடர்பு இருப்பது தெரிகிறது. அதன் பேரில் அவர்களை பிடித்து விசாரணை நடத்த போலீசார் முடிவு செய்துள்ளனர். கைதான ஷாஹீன் கான் நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.




## அகில பாரத ஆர்எஸ்எஸ் தலைவர் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா நிர்வாகிகளுடன் ஆலோசனை

கன்னியாகுமரி, ஜூலை.20

அகில பாரத ஆர் எஸ் எஸ் தலைவர் மோகன் பகவத் 4 நாட்கள் பயணமாக கடந்த 17ம் தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணியளவில் கன்னியாகுமரிக்கு வந்தார். கன்னியாகுமரி வந்த அவரை விவேகானந்தா கேந்திரநிர்வாகிகள் வரவேற்றனர். விவேகானந்தா கேந்திராவில் தங்கிய அவர் கேந்திரா நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். மேலும் கேந்திரா வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து கலந்துரையாடினார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் மற்றும் சன்னதி தெருவில் உள்ள 24 வது சக்தி பீடமான தியாக சவுந்தரி பத்திரகாளி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அவருடன் ஆர் எஸ் எஸ் நிர்வாகிகள் பலர் சாமி தரிசனம் செய்தனர். மாலையில் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திராவின் அகில இந்திய தலைவர் உடல் நல குறைவு காரணமாக நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார், அவரை சந்தித்து நலம் விசாரித்தார் .

இன்று (திங்கட்கிழமை) காலை புறப்பட்டு செல்கிறார். ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் வருகையையொட்டி மாவட்ட எஸ்பி ஸ்டாலின் மற்றும் கன்னியாகுமரி டிஎஸ்பி பிரகாஷ் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கன்னியாகுமரி நகரம் முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

## தருமபுரி மாவட்ட வனத்துறை அறிவிப்பு.

தருமபுரி ஜூலை 20

நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளி:

பெயர்:வெங்கடாசலம்

த/பெ : ராமசாமி

முகவரி: பாப்பம்பாடி கிராமம் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தர்மபுரி மாவட்டம்.

தருமபுரி வனசரக பெருமா குற்ற வழக்கு (STOR) எண்: 1/2012.

நாள்: 31/03/2012

U/S 1882ம் பாருடா தமிழ்நாடு வனச்சட்டம் V சட்டப்பிரிவு 21 (d) (e) (f), 36(A),41,49(A),51 மற்றும் தமிழ்நாடு திருத்திய வன சட்டம் 1970 3(1) மற்றும் 7 வழக்கின் தருமபுரி மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்: 2, CC NO. 71/2015.

மேலே குறிப்பிட்ட நபர் நீதிமன்றத்தால் தேவைப்படும் குற்றவாளி ஆவார். எனவே இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் கீழ்கண்ட முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வனசரக அலுவலகம் தருமபுரி வனசரகம், தருமபுரி செல்:8925931540. வனவர், பரிகம் பிரிவு தருமபுரி வனச்சரகம் தருமபுரி செல்: 8925932308. வனக்காப்பாளர், பரிகம் வடக்கு வனக் காவல் சுற்று, தருமபுரி, வனச்சரகம் தருமபுரி செல்: 8925932357. ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஈங்கூர் தாட்கோ பின்னாலாடை தொழிற்பேட்டைகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்து சாமி சமூக நீதி துறை அலுவலர் சுடலை மணி தாசில்தார் செல்வ குமார் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கன்னியாகுமரி கடலில் திடீர் நீர்மட்டம் தாழ்வு

### இரண்டரை மணி நேரத்திற்கு பின் மீண்டும் படகுகள் இயக்கம்

கன்னியாகுமரி,ஜூலை.20

பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்வார்கள். பின்னர் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்த்துவிட்டு திரும்புவது வழக்கம். இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகுகளை இயக்கி வருகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அதிகாலை முதலே சூரிய உதயத்தை காண கன்னியாகுமரி கடற்கரையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் சூரிய உதயத்தை கண்டு களித்த பிறகு பிறகு கடலில் வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொடங்கிய படகு போக்குவரத்து காலை 9 மணியளவில் கடலின் நீர்மட்டம்தாழ்வு காரணமாக நிறுத்தப்பட்டது. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். பின்னர் 11.30 மணியளவில் கடலில் நீர்மட்டம் சகஜ நிலைக்கு திரும்பியதைக் தொடர்ந்து படகு 2 1/2 மணிநேரம் இடைவேளைக்கு பின் படகு போக்குவரத்து தொடங்கியது.

அதனைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் உற்சாகமாக படகில் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்த்துவிட்டு திரும்பினர்.



## நாகர்கோவில் மாநகராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள்

### நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆய்வு

நாகர்கோவில் ஜூலை 20

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் மதுசூத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப்பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அதனடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக வடசேரி பேருந்துநிலையத்தில் மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.8.95 கோடி மதிப்பில் சந்தை கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டனர்.

தொடர்ந்து வடசேரி ஆம்னி பேருந்து நிலையம், ஒழுகினசேரி பகுதி, அண்ணா பேருந்து நிலையம் போன்றவற்றையும் ஆய்வு மேற்கொண்டதோடு, பயணிகளின் வசதிகள் குறித்து, பேருந்து நிறுத்துமிடங்களையும் பார்வையிட்டனர்.

தொடர்ந்து வலம்புரிவிளை குப்பை கிடங்கு நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவங்கள், உணவகங்கள் உள்ளிட்டவைகளில் ஒவ்வொரு நாளும் டன் கணக்கில் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகள் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளைபகுதியில்உள்ளகுப்பை கிடங்கில் கொட்டப்படுகிறது. இங்குள்ள குப்பைகளை மறுசுழற்சி செய்ய துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு, பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை பேணிகாத்திட மாநகராட்சி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும் கோணம் அறிவு சார்ந்த மையத்தினை நேரில் பார்வையிட்டார்கள். அங்கு நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு,

இப்பணிகளை ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஒப்பந்ததாரக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா, உதவி ஆட்சியர் ( பயிற்சி) ர.மோனிகா, செயற்பொறியாளர்கள், பொறியாளர்கள், துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.